| S–6861 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT5C1 |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025

### Fifth Semester

### தமிழ்

### சிற்றிலக்கியம்

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　(10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. தமிழ்விடுதூது கூறும் ஒன்பது சுவைகளைத் தருக.

2. தமிழ்விடுதூது எடுத்துரைக்கும் சிற்றரசர்கள் யார்?

3. சேக்கிழார் பிள்ளைத்தமிழில் தொண்டை மண்டலத்தின் சிறப்புகளைக் குறிப்பிடுக.

4. சேக்கிழார் பிள்ளைத்தமிழில் அன்னத்தின் சிறப்பினைக் கூறுக.

5. ஒட்டக்கூத்தர் இயற்றிய நூல்கள் யாவை?

6. விக்கிரம சோழன் உலாவில் கற்பனை நயம் பற்றிக் குறிப்பிடுக.

7. கலிங்கம் வென்ற கருணாகரன் பற்றி எழுதுக.

8. கலிங்கத்துப்பரணியில் மூங்கில் முத்துதிர்தல் பற்றி எழுதுக.

9. நந்திக் கலம்பகத்தில் மன்னனின் மாண்பை படைவீரன் கூறும் விதம் யாது?

10. நந்தி மன்னனின் திருவடிச் சிறப்பினைத் தருக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) தமிழ்விடுதூது கூறும் இலக்கணச் செழுமையை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழ்விடுதூது வழி தமிழ் எழுத்துக்களின் பிறப்பு, வளர்ச்சி பற்றி விளக்குக.

12. (அ) விக்கிரம சோழன் உலாவில் குலோத்துங்க சோழனின் சிறப்பினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) "தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவகை

வாக்கினால் சொல்ல வல்லபிரான்" – என்ற அடிகள் உணர்த்தும் கருத்துக்களை விளக்குக.

13. (அ) விக்கிரம சோழனின் பட்டத்து யானையின் பெருமைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) விக்கிரம சோழன் உலாவில் சிற்றரசர்களின் பண்புகளை விளக்குக.

14. (அ) கலிங்கத்துப் பரணியில் மான்களின் இயல்பு பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கலிங்கத்துப்பரணியில் காற்றின் இயல்பு பற்றி விளக்குக.

15. (அ) நந்தி மன்னனின் அரண்மனைச் சிறப்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) நந்திக் கலம்பகத்தில் தலைவன், தலைவியின் உறுப்பு நலம் புனைந்துரைப்பனவற்றை எடுத்துரைக்க.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விடையளிக்கவும்.

16. தமிழ்விடுதூது எடுத்துரைக்கும் இலக்கிய வளங்களை விவரிக்க.

17. சேக்கிழார் பிள்ளைத் தமிழில் செங்கீரைப் பருவக் கருத்துக்களைக் கட்டுரைக்க.

18. விக்கிரம சோழன் உலாவின் தனித்தன்மைகளை சான்றுடன் விளக்குக.

19. கலிங்கத்துப்பரணியில் 'காடு பாடியது' என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

20. மெ.ஜெயங்கொண்டான் இயற்றிய அழகப்பர் அந்தாதியின் சிறப்புகளை விவரி.

---

| S–6862 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT5C2 |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025.

### Fifth Semester

### தமிழ்

### தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையம்

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours                                                    Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. வண்ணச் சினைச்சொல் என்றால் என்ன?

2. வினைச்சொற்கள் பயின்று வரும் இடங்கள் யாவை?

3. "வேற்றுமைதாமே ஏழ் என மொழிப
   விளி கொள்வதன்கண் விளியொடு எட்டே" – வகைப்படுத்துக.

4. கொன் என்னும் சொல் எவ்வப் பொருள்களில் பயின்று வரும்?

5. இயற்பெயர் என்பதனைச் சுட்டுக.

6. உயர்திணை ஏற்கும் புள்ளியீறுகள் யாவை?

7. வினையெச்சம் என்றால் என்ன?

8. அம்ம என்னும் இடைச்சொல் எப்பொருளில் வரும்?

9. மொழிபுணர் இயல்பின் நான்கு வகைகளைச் சுட்டுக.

10. அவையல் கிளவி என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) “ஈற்றில் நின்றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றம் தாமே வினையொடு வருமே” – இந்நூற்பாவின் பொருளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பல பொருள் ஒரு சொல் குறித்த செய்திகளைக் குறிப்பிடுக.

12. (அ) இரண்டாம் வேற்றுமைக்குரிய பொருள்களை வரையறுக்க.

(அல்லது)

(ஆ) “ஆயெட் டென்ப தொழின் முதல் நிலையே” – விளக்குக.

13. (அ) விளியேலாப் பெயர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) “பாலறிவந்த அஃறிணைப் பெயரே” - விளக்குக.

14. (அ) இடைச்சொல்லின் இலக்கணத்தை எடுத்துக்காட்டுக.

(அல்லது)

(ஆ) குறிப்பொடு கொள்ளும் பத்துச் சொற்களைக் குறிப்பிடுக.

15. (அ) உரிச்சொல்லின் பொது இலக்கணம் யாது?

(அல்லது)

(ஆ) இயற்சொல், திரிசொல்லின் இயல்புகளைக் கூறுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. மரபு வழுவமைதி பற்றியக் கருத்துக்களைக் கிறவியாக்கம் வழிநின்று தொகுத்தெழுதுக.

17. உயர்திணைப் பெயர்களைத் தொகுத்துரைக்க.

18. ஒரு பொருளில் ஈருருபு மயங்கும் பொருள்களை விளக்கி கட்டுரை வரைக.

19. விரிவு வினை குறித்தச் செய்திகளைப் புலப்படுத்துக.

20. பத்து வகை எச்சங்களை விரித்தெழுதுக.

---

| S–6863 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT5C3 |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025

### Fifth Semester

### தமிழ்

### சிலப்பதிகாரம் - மதுரைக்காண்டம்

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. ‘மாதவத்து ஆட்டி’ யார்?

2. பாண்டியநாட்டு விலங்குகள் பிறருக்குத் துன்பம் தராமையின் காரணம் யாது?

3. மாதவமுனிவன், மாமறை முதல்வன் - யாவர்?

4. ‘என் உயிர் கொண்டுஈங்கு இவன் உயிர்தா’ - யார் யாரிடம் கூறியது?

5. ‘ஆய்ச்சியர் குரவை’ - யாருடைய அவதாரங்களைப் புகழ்ந்து பாடுகின்றன?

6. துன்பமாலையில் ‘பெண்ணே! நின்கணவன் கள்வன் அல்லன்’ - எனக் கூறியவர் யார்?

7. இறைவனை நடனமாட செய்தவள் யார்?

8. ‘திருப்புறம் பயம் ஊரின்’ - தலமரம் எது?

9. மதுரையில் கண்ணகியின் முன் தோன்றிய தெய்வத்தின் பெயர்?

10. 'கட்டுரை' - பொருள் தருக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மாதவி எழுதிய மடலின் சிறப்புகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கோவலனை பிரிந்த புகாரின் தன்மைகளை மாடலன் குறிப்பிடுவன யாவை?

12. (அ) ஊர்காண் காதையில் காணலாகும் அறுவகை பருவங்கள் பற்றிய செய்திகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) கோவலன் மனம் வருந்தியமைக்குக் கண்ணகியின் பதில் உரை யாது?

13. (அ) கண்ணகி கேட்ட துன்பச் செய்தியையும் அவளின் புலம்பலையும் விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) ஆயர்குல மகளிர்கள் திருமாலின் சிறப்பினைப்பாடிக் குரவை ஆடிய விதத்தினை விளக்குக.

14. (அ) கண்ணகியின் தோற்றம் பற்றி வாயிற் காப்போன் மன்னனிடம் கூறியனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) கண்ணகி மதுரையை எரித்த செய்திகளை விவரிக்க.

15. (அ) மதுராபதி தெய்வத்தின் தோற்றப்பொழிவு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மதுரையை விட்டு வணிக பூதம் சென்றவிதம் குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விரிவாக விடையளிக்க.

16. "அரசியலில் பிழைத்தோருக்கு அறங்கூற்று ஆவதூஉம்" என்ற தத்துவச் சிந்தனையை 'வழக்குரைகாதை' வழிநின்று விளக்குக.

17. மாங்காட்டு மறையோன் மதுரையின் வழிகள் பற்றி கூறிய செய்திகளைத் தொகுத்தெழுதுக.

18. மதுரையின் அமைப்பும் சிறப்பும் குறித்து 'ஊர்காண்காதை' கொண்டு எழுதுக.

19. மனித சமுதாயத்தின் துன்பம் போக்க இறைவனை வேண்டுதல் என்பதை 'ஆய்ச்சியர் குரவை' வெளிப்படுத்தும் செய்திகளை எழுதுக.

20. 'அழற்படுகாதை' வெளிப்படுத்தும் வெம்மை செய்திகளை வகைப்படுத்தி எழுதுக.

| S–6864 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT5C4 |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025

### Fifth Semester

### தமிழ்

### இலக்கியத் திறனாய்வியல்

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. இலக்கிய உலகைக் கண்டுகொள்ளத் தொடங்கும் ஓரி இலக்கியப் பயணமே திறனாய்வு எனக் குறிப்பிட்டவர் யார்?

2. வரலாற்றுமுறைத் திறனாய்வாளர்கள் எவற்றை அடிப்படையாகக் கொண்டு திறனாய்வு செய்ய வேண்டும்?

3. மருமக்கள் வழி மான்மியம் என்னும் நூலின் ஆசிரியர் யார்? அது எவ்வகை இலக்கியம்?

4. தொல்காப்பியம் குறிப்பிடும் மெய்ப்பாடுகளைக் குறிப்பிடுக.

5. Criticism என்ற ஆங்கிலச்சொல் எம்மொழியில் இருந்து தோன்றியது? திறனாய்வு என்ற சொல்லை வழக்கத்திற்குக் கொண்டு வந்தவர் யார்?

6. தமிழ்ச்சிறுகதையின் தந்தை என்றழைக்கபடுபவர் யார்? ஏன்?

7. உரையாசிரியரிடம் அமைந்திருக்கும் திறனாய்வை எவ்வாறு அழைப்பர்?

8. தமிழில் தோன்றிய முதல் செய்யுள் நாடகம் குறித்து எழுதுக.

9. முழுநிலை மாந்தர், ஒருநிலை மாந்தர் - என்பதற்கு விளக்கம் தருக.

10. மூன்று வகையான சிறுகதைகள் என ஸ்டீவன்சன் குறிப்பிடுவதை எழுதுக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) தரமான திறனாய்வாளர்களைக் கண்டறிவது எவ்வாறு?

(அல்லது)

(ஆ) ஒரு நூலின் நிலையான வாழ்வுக்குரிய காரணங்கள் யாவை?

12. (அ) உரையாசிரியர்களின் திறனாய்வுப் பணிகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) இலக்கியத்தில் கற்பனையால் எழும் பயன்கள் யாவை?

13. (அ) சிறந்த நடையை அறிவதற்குரிய அடிப்படைகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) கவிதையின் கலை நுணுக்கத்திறனும் சொல்லாட்சியும் குறித்து எழுதுக.

14. (அ) தற்சார்புக் கவிதை - தற்சாராக் கவிதை வேறுபடுத்துக.

(அல்லது)

(ஆ) புதினத்திற்கும் சிறுகதைக்கும் உரிய வேறுபாட்டை எழுதுக.

15. (அ) கதை பொதிபாட்டு, நாடகப்பாட்டு ஆகியவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) கதை மாந்தரின் உரையாடலும் சூழல் அமைப்பும் குறித்து எழுதுக.

## பகுதி இ  (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவாக விடையளிக்க.

16. இலக்கியத்தை மதிப்பீடு செய்யும்போது எழும் சிக்கல்களைத் தொகுத்தெழுதுக.

17. இலக்கியத்தில் நடையும் அதன் இயல்புகளும் குறித்து விளக்கி வரைக.

18. பொது மக்கள் பேசும் பேச்சு வழக்கும் கிராமிய சொற்களுக்கும் உள்ள சிறப்பியல்புகளை எடுத்துரைக்க.

19. இக்கால இலக்கியங்களில் சிறுகதை பெறும் இடம் குறித்து விவரி.

20. கதையும், கதைக்கோப்பும் குறித்து கட்டுரைக்க.

| S–6865 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT5C5 |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025

### Fifth Semester

### தமிழ்

### இக்கால மொழியியல்

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. மொழி அறிவியல் என்றால் என்ன?

2. கலையையும் அறிவியலையும் இணைக்கும் பாலமாக விளங்குவது எது?

3. ஒலியியல் என்றால் என்ன?

4. உருபன் - பெயர்க்காரணம் தருக.

5. உருபனியல் விளக்கம் தருக.

6. தொடர் உருபன் எடுத்துக்காட்டுத் தருக.

7. கூட்டு வினைகள் எத்தனை வகைப்படும்.

8. மீட்டுருவாக்கம் - விளக்கம் தருக.

9. மொழி கடன் வாங்குதல் - குறிப்புத் தருக.

10. உள மொழியியல் - விளக்கம் கூறுக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) மொழியியலின் பிரிவுகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) பேச்சுறுப்புகள் குறித்து விளக்குக.

12. (அ) ஒலியனியலில் காணலாகும் சிக்கல்களை விவரி.

(அல்லது)

(ஆ) ஒலியன்களைக் கண்டறிந்து விளக்கும் முறை பற்றி விளக்குக.

13. (அ) உருபு - உருபன் மாற்றுருகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) உருபனியல் - எடுத்துக்காட்டுடன் எழுதுக.

14. (அ) கூட்டு வினைகளின் வகைகளைச் சான்றுடன் தருக.

(அல்லது)

(ஆ) மீட்டுருவாக்கம் பற்றி விவரி.

15. (அ) மொழியியலில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) சொற்களைக் கடன்பெறுவதற்கான காரணங்கள் பற்றி விவரி.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்கவும்.

16. உயிரொலிகளின் செயல்பாடுகளைக் கட்டுரைக்க.

17. உருபனியல் முறைகளை சான்றுடன் விளக்குக.

18. உருபொலியனியல் மொழியியலில் முக்கியப் பங்காற்றுவதைத் தொகுத்துரைக்க.

19. ஒப்பியல் மீட்டுருவாக்கம் பற்றி கட்டுரை வரைக.

20. மொழி கடன்பெறுவதற்கான சூழல்களை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

———————

| S–6866 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT6E1 |

# B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025

## Sixth Semester

## தமிழ்

## விருப்பப்பாடம் – சங்க இலக்கியம்

## (CBCS – 2022 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. நல்ல என்ற அடைமொழி பெற்ற நூல் எது? அந்நூலமைப்பைக் குறிப்பிடுக.

2. "இசைபட வாழ்பவர் செல்வம் போல" – என்பதன் பொருளைச் சுட்டுக.

3. நற்றிணையைத் தொகுத்தோர், தொகுப்பித்தோர் யாவர்?

4. "பெயல்நீர்க்கு ஏற்ற பசுங்காலம் போல" – என்ற குறுந்தொகை அடியில் சுட்டப்படும் உவமை யாது?

5. அகநானூறு – நூற்குறிப்பு தருக.

6. அகநானூற்றில் ஐந்திணைகளுக்கும் உரிய பாடல்களின் வகைப்பாட்டினை விளக்குக.

7. ஐங்குறுநூற்றினைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் யாவர்?

8. உள்ளுறை, இறைச்சி மிகுந்து பாடப்பட்டுள்ள எட்டுத்தொகை நூல் எது?

9. ஔவையார் போரினை தவிர்க்கும் பொருட்டு யாருக்காக யாரிடம் தூதாகச் சென்றார்?

10. "சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே" – என ஔவையார் யாரைப் புகழுகின்றார்?

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) குறுந்தொகையில் பிரிவு ஆற்றா தலைவி கூற்றான பாலைத் திணைப் பாடலை விளக்குக.

(அல்லது)

(ஆ) குறுந்தொகையில் தலைவன் கூற்றாக அமைந்த முல்லைத் திணைப் பாடலை விளக்குக.

12. (அ) "நின்ற சொல்லர், நீடுதோன்று இனியர்" – எனத் தொடங்கும் குறிஞ்சித்திணை தலைவி கூற்றுப்பாடலை விளக்குக.

(அல்லது)

(ஆ) வினைமுற்றி மீள்வான் நேர்ப்பாகற்குக் கூறிய முல்லைத் திணைப் பாடலை நற்றிணை வழி விளக்குக.

13. (அ) செவிலித்தாய் கூற்றாக அமைந்த அகநானூற்றுப் பாடலின் பொருளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பிரிவிடை ஆற்றாளாய தலைமகள் தோழிக்குக் கூறிய அகநானூற்றுப் பாடலை விவரி.

14. (அ) தலைவனின் இயல்புகளைப் பழிக்கும் சிறுவெண் காக்கைப் பத்து பாடல்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) எண்தேர் செய்யும் தச்சன்

திங்கள் வலித்த கால் அன்னோனே' – என்ற ஔவையார் பாடலின் பொருளை விளக்குக.

15\. (அ) 'யாமொடும் கொள்ளா, பொழுதொடும் புணரா' — என்ற ஔவையார் பாடலின் பொருளை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'சிற்றில் நற்றூண் பற்றி' — எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை விளக்குக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் மூன்றினுக்கு விடையளிக்க.

16\. தலைவன், தலைவியின் உளப் பண்புகள் குறித்து ஔவையார் பாடியுள்ள திறத்தை விவரி.

17\. கபிலர் பாடிய குறிஞ்சித்திணைப் பாடல்களை நற்றிணை வழி விளக்குக.

18\. தலைவன் தன் நெஞ்சிற்கு உணர்த்துவதாய் உள்ள அகநானூற்றுப் பாடல்களை விவரி.

19\. வெள்ளாங்குருகுப் பத்து பாடல்கள் உணர்த்தும் அக வாழ்வியல் கூறுகளை விளக்குக.

20\. அதியமான நெடுமான் அஞ்சியை ஔவையார் எவ்வாறெல்லாம் புகழ்ந்துள்ளார் என்பதை விவரி.

———————

| S–6867 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT6E2 |

# B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025

## Sixth Semester

தமிழ்

**விருப்பப்பாடம்–தொல்காப்பியம் –பொருளதிகாரம் இளம்பூரணம்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடையளிக்கவும்.

1. களவு ஒழுக்கம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

2. இடந்தலைப்பாடு என்றால் என்ன?

3. தோழியிற் புணர்வு என்றால் என்ன?

4. எண்வகை மணங்களைக் குறிப்பிடுக.

5. இறைச்சி குறித்து எழுதுக.

6. உள்ளுரையின் வகைகள் யாவை?

7. தலைமக்களுக்குரிய ஒப்புமைப் பண்புகள் யாவை?

8. உவமப் போலி என்றால் என்ன?

9. நூலின் இயல்புகள் யாவை?

10. “மக்கள் தாமே ஆறறி வுயிரே” – குறிப்பு வரைக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு பக்க அளவில்** விடையளிக்க

11. (அ) களவியலில் தோழியின் மரபும், செவிலியில் இயல்பும் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) களவில் தலைவிக்குறிய கூற்று நிகழுமிடங்களை விளக்குக.

12. (அ) தலைமக்கள் மரபாகத் தொல்காப்பியம் கூறுவனவற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) கற்பில் தலைவி கூற்று நிகழும் இடங்களை எடுத்துரைக்க.

13. (அ) அறத்தொடு நிற்றல் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைவியும் தோழியும் திருமணம் முடிக்க தலைவனிடம் நிகழ்த்தும் கூற்றுக்களை எழுதுக.

14. (அ) உவமையின் நிலைக்களன்கள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) உவமவியலின் அமைப்புமுறை நுட்பத்தை விளக்குக.

15. (அ) நூற்குற்றங்களாக தொல்காப்பியர் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் நூல், சூத்திரம் பற்றிக் கூறுவன யாவை? விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு **விரிவான** விடையளிக்கவும்.

16. களவில் தலைவன் கூற்று நிகழும் இடங்கள் பற்றி கட்டுரை வரைக.

17. அக ஒழுக்க நிகழ்வில் வாயில்களின் பங்கை எழுதுக.

18. பொருளியலில் தோழியின் செல்வாக்கை ஆராய்க.

19. உவமவியலின் அமைப்பு முறை நுட்பத்தை விவரிக்க.

20. மரபியல் வழி உயிரினப் பாகுபாட்டு மரபினை எடுத்துரைக்க.

———————————

| S–6868 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT6E3 |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025

### Sixth Semester

தமிழ்

விருப்பப்பாடம்: சிலப்பதிகாரம் – வஞ்சிக்காண்டம்

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. "இவள் போலும் நங் குலக்கோர்

   இருந் தெய்வம் இல்லை" இவ்வரியில் கூறப்படும் தெய்வம் யார்?

2. சிலப்பதிகாரத்தில் குறிஞ்சி நிலமக்கள் ஆடிய குரவைக்கூத்தின் பெயர் என்ன?

3. சேரனை எதிர்த்து வந்த வட நாட்டு அரசர்கள் யாவர்?

4. "பால்படு மரபில் பத்தினிக் கடவுளை

   நூல்திறன் மாக்களின் நீர்படைசெய்து" – பொருள் தருக.

5. 'கறை' 'ஆயக் கணக்கரை' – பொருள் தருக.

6. கொடு கொட்டி நடனம் ஆடியவர் யார்?

7. ‘சோழ நாட்டார் பாவைக்குத் தோழிநான் கண்டீர்’ – யார் கூற்று?

8. பொறையன், மலையன் – விளக்கம் தருக.

9. கண்ணகியை வணங்கிய இலங்கைநாட்டு மன்னன் யார்?

10. “மூவாஇளம் நலம் காட்டி என்கோட்டத்து
நீவா என்றே நீங்கியவர்” யார் யாரிடம் கூறியது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) கண்ணகியைத் தெய்வமாக வழிபாடு செய்ய குறவர்கள் தம் இனத்தவரை அழைத்த செய்திகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரம் தோன்றுவதற்குக் காரணம் ‘குன்றக்குரவை’ என்பதை விளக்கி வரைக.

12. (அ) சேரன் செங்குட்டுவன் வடதிரைச் செலவு பற்றி கூறிய வஞ்சினக் கூற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) சேரன் செங்குட்டுவன் வடவர்களை வென்ற செய்திகளை எழுதுக.

13. (அ) சேரன் கண்ணகி சிலையைக் கடவுள் நிலையில் ‘நடுக’ என கட்டளையிட்ட விதம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மாடலன் சேரனுக்குக் கூறிய யாக்கை, செல்வம், இளமை நிலையாமை கருத்துக்களை எழுதுக.

14. (அ) மூவேந்தர்களைப் புகழ்ந்து பாடிய ‘உலக்கை பாட்டு’ செய்திகளைத் தருக.

(அல்லது)

(ஆ) வஞ்சி நகர மகளிர் பாடிய அம்மானைப் பாடலின் செய்திகளை நிரல்படுத்துக.

15. (அ) கண்ணகி கோயிலின் திருகுடமுழுக்கில் கலந்து கொண்ட மன்னர்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரத்தின் செய்திகளைக் கோட்போர் செய்ய வேண்டிய அறங்களாக இளங்கோவடிகள் குறிப்பிடுவன யாவை?

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் மூன்றனுக்கு விரிவான விடையளிக்க.

16. கோவலன் கண்ணகி உயிர் இணைவைப் பேசும்பகுதி என்பதை ‘குன்றக் குரவை’மூலம் நிறுவுக.

17. பத்தினிப் படிமத்திற்கு இமயத்தில் கல் கொண்ட பகுதி ‘கால்கோள் காதை’ என்பதை விவரிக்க.

18. இளங்கோவடிகள் பெண்ணுக்கு நடுகல் நாட்டி தெய்வமாக்கி புதுமையும் புரட்சியும் செய்த காதை நடுகற்காதை என்பதைத் தொகுத்தெழுதுக.

19. ‘வாழ்த்துக்காதை’ பகுதியில் காணலாகும் பிள்ளைத்தமிழ் கூறுகள் பற்றி எழுதுக.

20. ‘வரும்தருகாதை’ – வெளிப்படுத்தும் செய்திகளைக் கட்டுரைக்க.

———————

| S–6869 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT6E4 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025**

**Sixth Semester**

தமிழ்

விருப்பப்பாடம்: கணினித்தமிழ்

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours — Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. மையச்செயலகத்தின் மூன்று பகுதிகளை விளக்குக.

2. தரவுத்தளம் வரையறை தருக.

3. TAM, TAB மென்பொருள்கள் பயன் அடிப்படையில் எப்படி வேறுபடுகின்றன?

4. மிதவை விசைப்பலகை என்றால் என்ன?

5. அவளோகிதம் மென்பொருளின் சிறப்பு என்ன?

6. ஒலிபெயர்ப்பு – மொழி பெயர்ப்பு வேறுபாடு சுட்டுக.

7. தேடுபொறி பொருள் தருக.

8. மின் ஆளுகை என்றால் என்ன?

9. கற்றல் திறன்களின் நான்கு வகைகள் யாவை?

10. எட்மாடோ சமூகதளத்தின் அடிப்படை நோக்கம் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) கணினியின் முதன்மை வன்பொருட்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கணினியில் குறுக்கு விசைகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன?

12. (அ) தமிழ் எழுத்துரு குறியேற்ற மாற்றிகளின் பயன்பாட்டை விவரி.

(அல்லது)

(ஆ) தமிழ் தட்டச்சு குறுஞ்செயலிகளை விளக்கி வரைக.

13. (அ) எழுத்துருக்களைத் தரப்படுத்தவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவை?

(அல்லது)

(ஆ) தமிழில் பயன்படுத்தப்படும் கணினி மொழிகளை விளக்குக.

14. (அ) மின் இதழ்களின் வகைபாட்டை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) வலைப்பூக்கள் கருத்துப் பரிமாற்றத்திற்கு எவ்வாறு உதவுகிறது?

15. (அ) கணினித்தமிழ் சார்ந்த இதழ்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) மின்கற்றலின் பயன்பாட்டை விவரித்து எழுதுக.

## பகுதி இ

$(3 \times 10 = 30)$

எவையேனும் மூன்றனுக்கு விரிவான விடையளிக்க.

16. கணிப்பொறியின் வரலாறும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

17. தமிழைத் தட்டச்சு செய்யும் வெவ்வேறு முறைகளை விளக்கி வரைக.

18. இணையத்தில் தமிழின் தோற்றமும் வளர்ச்சி குறித்து எழுதுக.

19. மின்நூல்களின் வெவ்வேறு வகைகளை விளக்கி வரைக.

20. இணைய வழிக்கல்வியின் நோக்கும் போக்கும் குறித்து எழுதுக.

| S–7204 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT1C1 |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025

### First Semester

### தமிழ்

### இக்கால இலக்கியம்

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours                                    Maximum : 75 Marks

**பகுதி அ**                    $(10 \times 2 = 20)$

பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு தொடரில் விடை தருக.

1. பாரதியார் எழுதிய முப்பெரும் பாடல்கள் யாவை?

2. பாரதியார் பணியாற்றிய பள்ளியின் பெயர் என்ன?

3. மு. மேத்தா எழுதிய எந்த நூலிற்குச் சாகித்திய அகாதமி விருது கிடைத்தது?

4. 'ஓர் இலக்கியவாதியின் ஆரசியல் அனுபவங்கள்' என்ற நூலின் ஆசிரியர் யார்?

5. அவனுக்காக மழை பெய்கிறது எனும் புதினத்தை இயற்றியவர் யார்?

6. 'சிறுகதை ஆசான்' என்று அழைக்கப்படுபவர் யார்?

7. கி. ராஜநாராயணனின் படைப்புகளை எழுதுக.

8. கு. சின்னப்பாரதியின் புதினங்கள் நான்கினை எழுதுக.

9. பாரதிதாசனின் சில பாடல்களை இந்தியில் மொழியாக்கம் செய்தவர் யார்?

10. ஆறு அழகப்பன் நாடகத்துறையில் பெற்ற உயரிய விருது யாது?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

பின்வரும் வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) பாரதியாரின் தமிழ்ப்பணியினை எழுதுக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசன் குறிப்பு தருக.

12. (அ) மு. மேத்தாவின் இலக்கியப் பங்களிப்பை எழுதுக.

(அல்லது)

(ஆ) கண்ணீர்ப்பூக்கள் கவிதையில் காட்டப்பெறும் மனத் துயரங்களை விளக்குக.

13. (அ) ஜெயகாந்தனின் ஒரு பிரமுகர் கதையில் எறும்பின் பாத்திர மாண்பை எழுதுக.

(அல்லது)

(ஆ) குஞ்சம்மாளின் உள்ளத்தினை 'விடியுமா' கதை வழி விளக்குக.

14. (அ) சின்னப்பாரதியின் எழுத்துப் பணிகளைப் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சுரங்கம் நாவலில் வரும் பிகாஸ் சௌதரியின் பண்புகளை எழுதுக.

15. (அ) ஓரியின் வில்லாற்றலைக் கொல்லிப்பாவை வழி எழுதுக.

(அல்லது)

(ஆ) கொல்லிப்பாவையின் திறன்களை அரிசில்கிழார் கூற்றுவழி கூறுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை அளவில் விடை தருக.

16. பாரதியார் கண்ணனைப் பல்வேறு நிலைகளில் பாவித்துப் பாடிய திறன்களை விவரிக்க.

17. மனித மனத்துயரங்களைக் கண்ணீர்ப்பூக்கள் கவிதை வழி விளக்குக.

18. 'ஏழைகளின் வீட்டுக் கதவு' படும்பாட்டைக் கதவு கதை வழி விவரிக்க.

19. சுரங்கம் கதை உணர்த்தும் பொதுவுடைமை கருத்துகளை விவரிக்க.

20. ஓரியின் வீரம் ஈரத் திறங்களை கொல்லிப்பாவை வழி நின்று விளக்குக.

———————

| S–7205 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT1C2 |

# B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025

## First Semester

## தமிழ்

## நன்னூல் எழுத்தும் யாப்பருங்கலக்காரிகையும்

## (CBCS – 2022 onwards)

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. நன்னூல் சுட்டும் பாயிரத்தின் பெயர்கள் எத்தனை?

2. எழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?

3. பதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

4. உடம்படு மெய்களை எழுதுக.

5. தனிக்குறின் முன்ஒற் றுயிர்வரின் இரட்டும் - கூறுக.

6. குறுகிய மூவுயிர்களை எழுதுக.

7. எழுவா யெழுத்து ஒன்றி வருவது எது?

8. ஈரடியில் வரும் வெண்பாவின் பெயர் என்ன?

9. ஈற்று அயலடி முச்சீரால் வரும் அகவல் வகை எது?

10. அராகம் எனும் உறுப்பைப் பெற்று வரும் பா எது?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) நூலினது இலங்கணங் கூறி அதனை விளக்குக.

(அல்லது)

(ஆ) முதலெழுத்து, சார்பெழுத்துகளை விவரிக்க.

12. (அ) ஓரெழுத்தொரு மொழிகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உடம்படு மெய்யினை விளக்கி, வினாச்சுட்டின் முன்னர் நாற்கணமும் புணரும் விதியினை விளக்குக.

13. (அ) மெய்யீற்றுப் புணர்ச்சி என்றால் என்ன? ணகர, னகர ஈற்றுப்புணர்ச்சியில் இரண்டினை எழுதுக.

(அல்லது)

(ஆ) சாரியை பற்றி விவரிக்க.

14. (அ) எழுத்து பற்றிய கருத்துக்களைக் காரிகை வழி விவரிக்க.

(அல்லது)

(ஆ) சீர் பற்றி விளக்கி எழுதுக.

15. (அ) ஆசிரியப்பா பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) கலிப்பா பற்றி விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடை தருக..

16. நல்லாசிரியர், ஆசிரியர் அல்லாதார் இலக்கணம் குறித்துக் கட்டுரைக்க.

17. மொழி முதல், இறுதியெழுத்துக்களைக் கட்டுரைக்க.

18. மெய்யீற்றில் லகர ளகர ஈறு புணருமாற்றைக் குறிப்பிடுக.

19. தொடை பற்றி கருத்துகளை விவரிக்க.

20. வெண்பா பற்றி விரிவாக எழுதுக.

———————

| S–7209 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT3C2 |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025.

### Third Semester

### தமிழ்

### நம்பியகப் பொருளும் புறப்பொருள் வெண்பா மாலையும்

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours　　　　　　　　　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. அகத்திணை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

2. பெருந்திணைக்குரிய இலக்கணத்தைச் சுட்டுக.

3. கற்பில் நிகழும் பிரிவின் வகைகள் யாவை?

4. இயற்கைப் புணர்ச்சி நிகழும் இரு நிலைகளை எழுதுக.

5. வேய் என்றால் என்ன?

6. சுரத்து உய்த்தல் என்றால் என்ன?

7. எயில் காத்தல் என்பது யாது?

8. மண்ணுமங்கலம் என்றால் என்ன?

9. உழபுல வஞ்சி என்பது யாது?

10. பாடாண் திணையின் துறைகள் எத்தனை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) ஐந்திணைகளுக்கும் உரிய இரு வகைப் பொழுதுகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) மெய்யுறு புணர்ச்சி நிகழும் காலம் யாவை?

12. (அ) தலைவியின் எய்தும் புணர்ச்சியின் வகைகள் யாவை?

(அல்லது)

(ஆ) களவில் பிரிவின் வகைகளைச் சுட்டுக.

13. (அ) வெட்சி அரவத்தின் இயல்பினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) கொற்றவை நிலையை வஞ்சீப் படலம் வழி ஆய்க.

14. (அ) உழிஞைத் திணையின் துறைகளில் ஐந்திணை விவரி.

(அல்லது)

(ஆ) வாகைப் படலத்தில் பொருந வாகை, அறிவன் வாகைகளை எழுதுக.

15. (அ) பாடாண் திணையில் மணமங்கலம், பொலிவு மங்கலம் துறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆளெரிப்பிள்ளை, பிள்ளைத் தெளிவு ஆகிய துறைகளை விளக்குக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் மூன்றனுக்கு விரிவான விடையளிக்க.

16. மருதத் திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருளை விளக்குக.

17. வரைதல் வேட்கை என்றால் என்ன? அதன் வகைகளை விவரி.

18. வஞ்சித் திணையின் துறைகளை வகைப்படுத்தி விளக்குக.

19. கரந்தைத் திணையின் துறைகளை விவரி.

20. இடைநிலை, குடைமங்கலம், பரிசில் துறை, பரிசில் நிலை, பரிசில் விடை ஆகிய துறைகளை விவரி.

———————

| S–7210 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT4C1 |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025.

### Fourth Semester

### தமிழ்

### காப்பிய இலக்கியம்

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. மணிமேகலைத் துறவு - பெயர்க்காரணம் தருக.

2. மணி பல்லவத்தில் உயிர் துறந்தவன் யார்?

3. கம்பராமாயணத்தின் முதல் நூல் எது?

4. கழுகுகளுக்கு அரசன் யார்?

5. பெரியபுராணம் எந்த நூல்களை அடிப்படையாகக் கொண்டது?

6. "நீண்ட செஞ்சடையினார்" யார்?

7. சூசை, மரியாள் ஆகியோரின் திருக்குமரன் யார்?

8. குழந்தைநாதன் செய்தவற்றை அறிந்தவர்கள் யாவர்?

9. கதீஜா என்பவள் யார்?

10. சீறாப்புராணம் எத்தனை படலங்களைக் கொண்டது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) மணிமேகலையின் சிறப்பம்சங்கள் யாவை?

(அல்லது)

(ஆ) மணிமேகலை அமுதசுரபி பெற்ற வரலாற்றை விளக்குக.

12. (அ) மகேந்திர மலை நிகழ்ந்த குழப்பத்தினை விவரி.

(அல்லது)

(ஆ) மைந்நாகம் மானிட வடிவில் உரைத்தவை யாவை?

13. (அ) பெரியபுராணம் - குறிப்புத் தருக.

(அல்லது)

(ஆ) பூசலார் மனதில் கோயில் கட்டிய திறத்தை விளக்குக.

14. (அ) திருமகனின் எருசலேம் பயணம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஏணியும் சிலுவையும் பற்றி விளக்குக.

15. (அ) கதீஜா கண்ட கனவினை விளக்குக.

(அல்லது)

(ஆ) நபிகள் நாயகத்திற்கு கதீஜா கொடுத்த அருட்சுவை உணவு பற்றி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. மணிமேகலை அமுதசுரபி கொண்டு செய்த அறப்பணிகளைத் தொகுத்தெழுதுக.

17. அனுமன் வானில் சென்ற காட்சியினை கம்பராமாயணம் கொண்டு விவரி.

18. பூசலார் நாயனார் புராணத்தின் சிறப்பியல்புகளை விளக்குக.

19. தேம்பாவணி வாயிலாக கதீஜா என்ற பாத்திரப்படைப்பின் சிறப்பினை விளக்குக.

20. நும்பாடப் பகுதி கொண்டு உமறுபுலவர் உரைத்தவற்றை விவரிக்க.

———————

| S–7211 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT4C2 |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025

## Fourth Semester

## தமிழ்

## தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணம்

## (CBCS – 2022 onwards)

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. தொல்காப்பியர் சுட்டும் சார்பெழுத்துக்களைக் குறிப்பிடுக.

2. உயிரளபெடை என்றால் என்ன?

3. மொழி முதல் நிற்கும் உயிரெழுத்துக்கள் யாவை?

4. உட்பெறு புள்ளி உருவாகும்மே - விளக்கம் தருக.

5. தொகை மரபு - பெயர்க்காரணம் தருக.

6. நாழி முன் உரி என்னும் சொல் எவ்வாறு புணரும்?

7. தமிழென் கிளவியும் அதனோ ரற்றே - குறிப்பு வரைக.

8. நூறூர்ந்து வரூஉம் ஆயிரக் கிளவி - இலக்கணம் தருக.

9. மூன்று என்னும் எண்ணுப்பெயர் புணரும் முறை யாது?

10. குற்றியலுகரம் புணர்மொழியுள் எவ்வாறு வரும்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) மாத்திரையின் இலக்கணம் யாது?

(அல்லது)

(ஆ) மகரங் குறுமிடத்தை ஆய்க.

12. (அ) எழுத்துப்போலி என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) உடம்படுமெய் என்பதை விளக்குக.

13. (அ) மகர ஈற்று நாட்பெயர்களின் புணர்ச்சியை விளக்குக.

(அல்லது)

(ஆ) குற்றுகர ஈற்றிற்கு இன்சாரியை பெறுமாற்றை விளக்குக.

14. (அ) எல்லோரும், எல்லீரும் என்பன பெறும் முடிவுகளைத் தருக.

(அல்லது)

(ஆ) ஆந்தை, பூந்தை என்னும் சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக.

15. (அ) வினாப்பெயர்கள் எவ்வாறு புணரும்?

(அல்லது)

(ஆ) சுட்டுப்பெயர்ப் புணர்ச்சியை விளக்கி வரைக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விரிவாக விடையளிக்க.

16. தொல்காப்பியப் பாயிரச் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

17. மொழி முதல் எழுத்துக்கள் குறித்துக் கட்டுரைக்க.

18. ஐகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி முறை குறித்து விளக்குக.

19. குற்றியலுகர ஈற்று, மரபுப்பொருட்கள் எவ்வாறு புணரும்?

20. லகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைத் தொகுத்தெழுதுக.

| S–7212 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT4C3 |

# B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025

## தமிழ்

## சிலப்பதிகாரம் — புகார்க்காண்டம்

## (CBCS – 2022 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை?

2. பெருங்குடி வாணிகன் பெரு மடமகள் யார்?

3. இந்திரனின் மகன் யார்?

4. மூவகை எழினிகள் எவை?

5. பிறவா யாக்கை பெரியோன் யார்?

6. துர்க்கை ஆடிய கூத்து யாது?

7. உரைசொல் சிறப்பின் மன்னன் யார்?

8. மாலை வாங்கிய வேல் அரி நெடுங்கண் யார்?

9. பாசாண்டச் சாந்தன் கோயில் மாலதி முன் தோன்றியதை யார்?

10. உறையூரின் மற்றொரு பெயர் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) கோவலன் கண்ணகி திருமண நிகழ்வை விளக்குக.

(அல்லது)

(ஆ) காதலர் பிரியாமல் கவவுக்கைகள் நெகிழாமல் தீது அருக - இடஞ்சுட்டிப் பொருள் எழுதுக.

12. (அ) மாதவி ஆடிய ஆடல்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) புகார் நகரின் மாலைப்பொழுதை விளக்குக.

13. (அ) மருவூர்ப் பாக்கத்தின் சிறப்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) மக்களின் களிப்பை கடன் ஆடு காதை வழிநின்று விளக்குக.

14. (அ) வண்டுகள் ஆர்பரிக்கும் காவிரியின் நிலையை எழுதுக.

(அல்லது)

(ஆ) கோவலன் ஓலையை மறுத்த நிகழ்வை விளக்குக.

15. (அ) தேவந்தியின் தேறுதல் மொழிகள் யாவை?

(அல்லது)

(ஆ) உழவரின் உயர்வாக நாடுகாண் காதை கூறுவன யாவை?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விரிவாக விடையளிக்க.

16. கோவலன் கண்ணகி இல்லற மாண்பை ஆய்க.

17. காதலரைப் பிரிந்த மாதரின் நிலையும், காமதேவனின் ஆட்சியையும் விவரி.

18. மாதவியின் பதினோரு ஆடல்களின் சிறப்பை விவரி.

19. கோவலனின் பிரிவுக்குக் காரணமான காணல்வரிப் பாடல்களை ஆராய்க.

20. கண்ணகியின் தீய கனவை கனாத்திறம் உரைத்த காதை வழியாக ஆய்க.

| S–7214 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLTA2 |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025

### தமிழ்

### இயைபுப்பாடம் : தமிழ் இலக்கிய வரலாறு

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. தொல்காப்பியத்தின் பெருமைகளுள் இரண்டினைச் சுட்டுக.

2. ஐங்குறுநூறு பாடிய புலவர்களின் பெயர்களையும், அவர்கள் பாடிய திணைகளையும் பட்டியலிடுக.

3. ஐஞ்சிறு காப்பியங்களைப் பட்டியலிடுக.

4. காப்பியப்புலவர்கள் குறித்த தமிழன்னலின் கருத்து யாது?

5. அந்தாதி - விளக்கம் தருக.

6. நிகண்டுகள் குறித்து எழுதுக.

7. சிவஞான போத பேருரை - விளக்குக.

8. அருணகிரிநாதர் - குறிப்பு வரைக.

9. உவமைக்கவிஞர் படைப்புகளைப் பட்டியலிடுக.

10. குலோத்துங்கன் கவிதைகள் சுட்டும் பொருள் யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) தொல்காப்பியம் இலக்கணப்பழைமை மிக்க நூல் ஆய்க.

(அல்லது)

(ஆ) பதிற்றுப்பத்து நூலின் வழியாக அறியும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

12. (அ) கொன்றைவேந்தன் கூறும் அறக்கருத்துக்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) புராணகாப்பியங்கள் தமிழ் இலக்கியத்தில் பெறும் இடம் குறித்து ஆய்க.

13. (அ) சிற்றிலக்கியத்தில் மடல் பெறும் இடம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பொருளிலக்கண நூல்கள் குறித்து விளக்குக.

14. (அ) நாடகத்தமிழ் விளக்குக.

(அல்லது)

(ஆ) கிறித்தவம் தமிழுக்கு ஆற்றிய தொண்டினை விளக்குக.

15. (அ) திராவிட இயக்க இலக்கிய வளர்ச்சி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பாரதியாரின் புரட்சிகர சிந்தனைகளை அவரது பாடல்கள் வழி விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு விரிவான விடையளிக்க.

16. சங்க இலக்கியம் தமிழரின் வரலாற்றுக் களஞ்சியம் என்பதைத் தகுந்த சான்றுகளுடன் விளக்குக.

17. கிறிஸ்தவ, இசுலாமிய காப்பியங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

18. சைவ சித்தாந்த சாத்திரங்கள் குறித்து விளக்கி வரைக.

19. சைவம், வைணவம் தமிழுக்கு ஆற்றிய தொண்டினை விளக்கி கட்டுரை வரைக.

20. பொதுவுடைமை இலக்கியங்கள் சமூக மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பணிகளைத் தொகுத்துக் கட்டுரைக்க.

———————